# விடை தேடும் வினாக்கள்



## அப்பர் வழங்கிய ஆன்மிகச் செல்வம்

www.saivamonline.com

முனைவர். இரா. செல்வக்கணபதி

# Contact Details

www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online



sspathipagam@gmail.com

Pay +91 94440 21113

+91 94440 21113

UPI 9444021113@UPI

# 4. அப்பர் வழங்கிய ஆன்மிகச் செல்வம்

இந்தியத் தத்துவச் சிந்தனையாளர்களுள் அப்பரடிகளுக்குத் தனித்த ஒரு பேரிட முண்டு. சாலப்பெருமையும் காலப்பழமையும் கொண்ட சைவ சமயத்தின் தூண்களுள் ஒருவராக எண்ணத்தக்க பெருமைபடைத்தவர் அவர். கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அப்பரடிகள், சமயவாழ்வு என்பது சமூகநலம் பேணுவதற்கு ஓர் அடித்தளம் என்று வாழ்ந்து காட்டியவர். அவரது அழகிய தேவாரப்பனுவல்களும், அதில் காணக்கிடைக்கும் ஆன்மிகச் சிந்தனைகளும் முற்றிலும் புரட்சிகரமாக அமைந்தன. அப்பரடிகளின் நீண்ட பெருமிதவாழ்க்கை, தமது ஆன்மிகச் சிந்தனைகளைத் தன்மேல் வைத்தே வாழ்ந்து காட்டிய, ஒருசத்திய சோதனையாகவே அமைகின்றது. அவரது வாழ்வாலும், வாக்காலும் இந்தியத்திருநாடுபெற்ற ஆன்மிகச் செல்வத்தைப் புதிய கண்ணோட்டத்தில் ஆராயும் முயற்சி மகிழ்ச்சியைத் தருகிறது.

''ஆன்மிகம்'' என்ற சொல், தத்துவ நூலாசிரியர்களிடையே ஆன்மாவின், உயிரின் ஈடேற்றம் குறித்த ஒரு கோட்பாடு என்ற பொருளிலேயே பெரும்பாலும் வழங்கப்பெற்று வருகிறது. இறைவழிப்பட்ட, சமயநெறி நின்று, உயிரின் ஈடேற்றம் குறித்து

www.saivamonline.com

ஆராயும் ''தத்துவ ஆய்வு'' என்ற பொருளில், ஆன்மிகம் என்ற சொல்லை இங்கே நாம் ஆள இயலாது. அத்தகு நுட்பமான ஆய்வு, சைவத்துறையில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் உருப்பெற்றிருக்கவில்லை. எனவே, அப்பர் வழங்கிய ஆன்மிகச் செல்வமென்பது, ஒரு சமயச் சான்றோர் இறைநெறி நின்று உலகவர்க்கு விடுத்த ஓர் அருட்செய்தி என்ற பொருளிலேயே ஆராயப்படுகின்றது. அப்பரடிகள் சைவசமய நெறி நின்று மக்களின் ஈடேற்றம் குறித்து வழங்கிய நற்செய்திகளே, அப்பர் வழங்கிய ஆன்மிகச் செல்வமாக விரிகின்றது.

காந்தியடிகள் இந்தியச் சுதந்திரப் போராட்டத்திற்குத் தலைமையேற்க வந்த காலை, அவரது வருகைக்கு நல்வரவு கூறுகின்றார் மகாகவி பாரதியார். ஆங்கிலேயர் ஆட்சியில், இந்தியத் திருநாடு தாழ்ந்துகிடந்த நிலை எத்தகையது என்பதை

---

**சமய வாழ்வு என்பது, சமூக நலம் பேணுவதற்கு ஓர் அடித்தளம் என்று வாழ்ந்து காட்டியவர். அவரது அழகிய தேவாரப் பனுவல்களும், அதில் காணக் கிடைக்கும் ஆன்மிகச் சிந்தனைகளும் முற்றிலும் புரட்சிகரமாக அமைந்தன. அப்பரடிகளின் நீண்ட பெருமித வாழ்க்கை, தமது ஆன்மிகச் சிந்தனைகளைத் தன்மேல் வைத்தே வாழ்ந்து காட்டிய ஒரு சத்திய சோதனையாகவே அமைகின்றது.**

---

அவர் கவிதை ஒன்று வேதனையோடு விரிக்கின்றது. ''இந்த வையத்து நாட்டில் எல்லாம், தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்றதாம் ஓர் பாரததேசம்'' என்று காந்தியடிகளின் தொண்டுக்குக் களமாய் அமைந்த பாரதத்தின் நிலை பாரதியாரால் படம் பிடிக்கப்படுகிறது. ஏறத்தாழ 20 ஆம் நூற்றாண்டில் நிலவிய அதேநிலை, அப்பரடிகள் அவதரித்த கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலும் நிலவியமையை வரலாற்றாய்வுகள் தெளிவுபட விரித்துரைக்கின்றன.



www.saivamonline.com

கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் வடக்கிலும், தெற்கிலும் நாட்டை மன்னர்கள் ஆண்டார்கள் என்றாலும், மன்னர்களைச் சமயவாதிகள் ஆட்டிப்படைத்திருந்தனர். மக்கள் வழிபாட்டு உரிமையையும் கூட இழந்திருந்தனர். தமிழ் வழக்கு ஒழிந்து அயல் வழக்குகள் தலை நிமிர்ந்தன. காலகாலமாகப் பேணிக்காத்த தமிழ்நாட்டுக் கலைகள், காமத்தைத் தூண்டுவன எனக் காரணம் காட்டப்பெற்று ஒடுக்கப்பெற்றன. பெண்மை, பெரிதும் இகழப்பட்டது. ''எல்லாம் தாழ்வுற்று'' எனப் பாரதியாரின் தொடரிலே காணப்படும் நிலை அன்றே தமிழகத்தில் நிலவியிருந்தது. அரசியல் வாழ்விலும் சமய வாழ்விலும் தனிமனித உரிமை என்பது முற்றாகப் புறக்கணிக்கப் பெற்றிருந்தது. ஓர் அருளாளனின் தொண்டுகளை, அவர் வாழ்ந்திருந்த காலப்

**ஓர் அருளாளனின் தொண்டுகளை, அவர் வாழ்ந்திருந்த காலப் பின்னணியோடு ஆராய்ந்தால்தான் அதன் சீர்மை நன்கு விளங்கும். அப்பரடிகளின் வாழ்வியலை உற்று நோக்கி ஆராய்ந்தால்தான், சமயம் சார்ந்த ஒரு சமூகப் புரட்சிக்கு வித்திட்டவர் அவர் என்பது பட்டாங்கு விளங்கும்.**

பின்னணியோடு ஆராய்ந்தால்தான் அதன் சீர்மை நன்கு விளங்கும். அப்பரடிகளின் வாழ்வியலை உற்று நோக்கி ஆராய்ந்தால், சமயம் சார்ந்த ஒரு சமூகப்புரட்சிக்கு வித்திட்டவர் அவர் என்பது பட்டாங்கு விளங்கும். அவர் நிகழ்த்திய உன்னதமான போராட்டக் கூறுகளில் காந்தியடிகள் நிழலாடுவது தெரிகின்றது.

அரசின் தலைவன் மன்னன், அவன் அமைச்சர்களின் துணைக் கொண்டு சமூகச் சட்டங்களின் வழி நாட்டை நடத்திச் செல்லும் கடமையுடையவன். அதேபோல், இறை நெறிப்பட்ட அறங்களை வற்புறுத்துவது, ஆன்மிகவாதிகளுக்கு உரியது. அரசு, சட்டத்தின் துணைக்கொண்டு மக்களின் புறவாழ்வை நெறிப்படுத்தும் கடமையுடையது. சமயம், அறத்தின் துணைக்கொண்டு மக்களின் அகவாழ்வை நெறிப்படுத்தும்



www.saivamonline.com

கடமையுடையது. இவை இரண்டுமே மக்களை நெறிப்பட வாழவைக்க இன்றியமையாதன.

தன்னுரிமை உடைய அரசும், சமயமும் ஒன்றிலொன்று குறுக்கிடாது, தத்தம் கடமைகளை இயற்றும் வரையில் பிரச்சனைகள் எழுதல் இல்லை. மாறாக, அரசு சமயத்தை நசுக்கித் தன்வயப்படுத்த முயன்றாலோ, அல்லது, சமயம் அரசை மயக்கி ஆட்சி கொள்ளத் தலைப்பட்டலோ நிலைமை சீர்குலைகிறது.

அப்பரடிகள் அவதரித்த காலத்தில், வடக்கே பல்லவ நாடும், தெற்கே பாண்டிய நாடும் முற்றாகச் சமணப் பிடியில் சிக்குண்டு கிடந்தமையைச் சேக்கிழாரின் பெரியபுராணம் தெளிவுபட அகச்சான்றுகளுடன் எடுத்துரைக்கின்றது. சமயம், அரசைத் தன்

---

**அரசு சட்டத்தின் துணைக்கொண்டு மக்களின் புறவாழ்வை நெறிப்படுத்தும் கடமையுடையது. சமயம், அறத்தின் துணைக்கொண்டு மக்களின் அகவாழ்வை நெறிப்படுத்தும் கடமையுடையது. இவை இரண்டுமே மக்களை நெறிப்பட வாழவைக்க இன்றியமையாதன.**

---

வயப்படுத்திக் கொண்ட பிறகு, சிறுபான்மை மக்களின் வழிபாட்டு உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அப்பரடிகள், சைவ சமயத்தை விட்டுச் சமண சமயத்தில் சேர்ந்தபோது எவ்வித எதிர்ப்பும் சிவ நெறியாளர்களால் எழுப்பப் பெறவில்லை. பல ஆண்டுகளுக்குப்பிறகு, அவரே சைவம் திரும்பியகாலை, சார்ந்திருந்த சமண குருமார்களின் தூண்டுதல்களால், மன்னன் அவருக்குக் கொடிய தண்டனைகளை வழங்குகிறான். எனவே, ஒரு சமயம் அரச செல்வாக்கைப்பெற்றால், ஏனைய சமயங்களின் உரிமைகள் பறிக்கப்படும் என்பதும், தாம் விரும்பிய சமய வாழ்வை மேற்கொள்ள உரிமை மறுக்கப்படும் என்பதும் நன்கு புலனாகின்றன.

நனிநாகரிகக் குடியாட்சி நாடுகள், மதச்சார்பற்ற அரசாகச் செயல்படுவதன் நோக்கம் எவ்வளவு உன்னதமானது, உரிமை சார்ந்தது என்பது இவற்றின் வாயிலாக உணரப்படுகின்றது.



www.saivamonline.com

அப்பரடிகள் பிறந்தகாலை மருள் நீக்கியார் எனப்பெயர் சூட்டப்பெற்றவர். சமணம் சார்ந்து, கற்பனைகற்று, வாதங்களில் வென்று தலைமைபெற்ற காலை வழங்கப்பெற்ற பெயர் தருமசேனர் என்பது. பல்லாண்டுகள், சமண சமயத் தலைமை பூண்டிருந்த அப்பரடிகள், தாய்ச் சமயமாகிய சைவசமயத்திற்கு மீள்கின்றார். இறைவன், அசரீரியாக ''நாவுக்கரசர்'' என்ற நாமத்தைச் சூட்டியருள்கின்றார். ஏனைய சமணக் குருமார்களின் தூண்டுதல்களால் சினம் கொண்ட பல்லவ மன்னன், மதம்மாறியதற்காக அப்பரடிகளைத் தண்டிக்க அழைத்து வருமாறு அரசியல் சுற்றத்தார்க்குக் கட்டளை இடுகிறான். கட்டளை இட்டவன் அரசியல் சுற்றத்தாரை நோக்கி, ''அழைத்து வரச்செல்லும் நீங்கள், சென்ற இடத்தில் ஏதேனும் பொருளைக் கையூட்டாகப் பெற்றுக்கொண்டு, விட்டுவிடாது கட்டாயமாகப் பற்றி வாருங்கள்'' என எச்சரிக்கிறான்.

---

**ஒரு சமயம், அரச செல்வாக்கைப் பெற்றால், ஏனைய சமயங்களின் உரிமைகள் பறிக்கப்படும் என்பதும், தாம் விரும்பிய சமய வாழ்வை மேற்கொள்ள உரிமை மறுக்கப்படும் என்பதும் நன்கு புலனாகின்றன.**

---

''தெருள் கொண்டோர் இவர் சொன்ன
தீயோனைச் செறுவதற்குப்
பொருள் கொண்டு விடாது என்பால்
கொடுவாரும் எனப்புகன்றான்''

சேக்கிழார் பதிவு செய்யும் இத்தொடர் அக்காலத்தில் நிலவிய சமூகச் சீரழிவை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இத்தகு சூழ்நிலையில், அரசனையோ, சமயவாதிகளையோ, அரசியல் சுற்றத்தார்களையோ எதிர்த்துக் கேட்கும் துணிவைச் சமூகம் பெற்றிருக்கவில்லை. சீர்கேடுகளை எதிர்த்துப் போராடும் துணிவைச் சமூக மக்கள் இழந்து விட்ட நேரத்தில், ஒரு சமய வாதியாகிய அப்பர்பெருமான், சமூகக் கொடுமைகளுக்கெதிராகப்



www.saivamonline.com

போர்க் கொடி உயர்த்திய புரட்சிகரமான வீர வரலாறு கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் அமைகின்றது.

இப்போராட்டம் கூட, ஒரு வன்முறைப் போராட்டமாக அமையாது, இறைவன் பெயரால் ஒரு சாத்துவிகப் போராட்டமாகவே உருவெடுக்கின்றது. திருவதிகை வந்தடைந்த அரசச் சுற்றத்தார் அப்பரடிகளை நோக்கி,

''இன்று நுமை அரசன் அழைத்தது
எமை விடுத்தான், போதும்''

எனக் கூறுகின்றனர்.

---

**சமயவாதிகள் கோழைகளல்லர். அநீதி இழைக்கப்படுமானால் அரசனையும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு. மரணம் அதற்கான பரிசாக அவர்களுக்கு ஏற்படுமானாலும் அதனை ஏற்க அவர்கள் தயங்க மாட்டார்கள். அரசன் வெறும் ஆட்சித் தலைவன் மட்டுமே. குடிமக்கள் ஒருகாலும் மன்னனுக்கு அடிமைகளல்லர்.**

---

மன்னவன் அழைப்பினை ஏற்க வேண்டிய கடமை, ஒரு குடிமகன் என்ற முறையில் தமக்கு உண்டு என்பதை உணராதவரல்லர் அப்பரடிகள். ஆனால், மன்னன் நடுவு நிலைமை தவறிவிட்ட நேரத்தில், அவனுக்கு மக்கள் மீது அதிகாரம் செலுத்தும் உரிமை இல்லை என்று அவர் கருதுகின்றார்.

''நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்''

என்ற திருத்தாண்டகத்தால், மன்னன் கட்டளைக்கு அடிபணிய மறுக்கின்றார் அப்பரடிகள்.

தமிழக வரலாற்றில் முடியாட்சிக்கெதிராக ஒரு குடிமகன் எழுப்பிய, அதிலும் ஒரு சமயத் தலைவர் எழுப்பிய வீரமிக்க உரிமைக் குரலாக, முதல் முழக்கமாக இது அமைகின்றது.



www.saivamonline.com

சமயவாதிகள் கோழைகளல்லர்; அநீதி இழைக்கப்படுமானால், அரசனையும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு; மரணம், அதற்கானபரிசாக அவர்களுக்கு ஏற்படுமானாலும், அதனை ஏற்க அவர்கள் தயங்க மாட்டார்கள்; அரசன் வெறும் ஆட்சித் தலைவன் மட்டுமே; குடிமக்கள் ஒருகாலும் மன்னனுக்கு அடிமைகளல்லர்; சங்கரனாகிய கோமானுக்கு மட்டுமே என்றென்றும் அடிமைகள் என்ற பொருள் தரும் திருத்தாண்டகம், அப்பரடிகளின் சமய நெறிப்பட்ட சமூகச் சிந்தனைகளுள், முதலாவதாக எண்ணத்தக்கது. ''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே'' என்று தொடங்கும் அமரகவி பாரதி,

''பூமியில் எவர்க்கும் இனி அடிமைசெய்யோம்
பரிபூரணனுக்கே அடிமைசெய்து வாழ்வோம்''

என்று நிறைவித்த அருமைப்பாட்டில், அப்பரடிகளின் உரிமை முழக்கம் புதுவடிவம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது.

---

**சிற்றுயிர்பால் காட்டும் உயிரிரக்கம் ஒரு கூறாக, மனித நேயம் ஒரு கூறாக, மனிதப் பண்பாடு ஒரு கூறாகச் சைவம் என்ற உன்னத நெறி உருப்பெற்று உயர்கின்றது.**

---

சைவம் சிவபெருமானைத் தலைவனாக ஏற்றுப்போற்றும் பெருநெறி, ஆனாலும், சைவம் கோயிலுக்குள்ளேயே ஒடுங்கிக்கிடக்கும்படி மக்களை ஒருகாலம் வற்புறுத்தியதே இல்லை. இறைவன் பெயரால் சிற்றுயிர்களிடம் அன்பும், மக்களிடம் நேயமும் கொண்டு வாழ வேண்டும் என்று வற்புறுத்திய பெருமை அதற்குண்டு. மனித நேயமே சைவத்தின் தலையாய கொள்கை. மக்களை விட்டு விட்டு ஆராய, சைவத்தில் என்ன இருக்கின்றது என்று வினாத் தொடுத்தவர்கள் சைவ சமயக்குரவர்கள்.

திருமூலரின் திருமந்திரம் சைவ சமயக் கோட்பாட்டுக்கு ஒரு பாடலில் அழகாக விளக்கம் தருகின்றது.

''யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை''



www.saivamonline.com

என்ற தொடரால், சைவத்தில் வழிபாடுகள், மற்றும் சடங்குகள் என்பன, ஒரு சிறு கூறு என்று விளக்கம் தருகிறார் அவர். ஒரு பச்சிலையைப் பறித்து, சிவலிங்கத்தின் திருவடியில் மிகு அன்போடு இடுவதோடு சமயம் சார்ந்த வழிபாடு நிறைவு பெறுகிறது.

திருமந்திரத்தின் இரண்டாவது வரி, சைவம் சார்ந்த மக்களின் சமூகக் கடமை இன்னது என்பதை வற்புறுத்துகிறது.

''யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை''

சிற்றுயிர்கள் பசியால் வாடிக்கிடக்கையில், அவற்றின் துயர்நீக்கும் உயிரிரக்கம் என்பது, சைவ சமயம் காட்டும் உன்னதக் கோட்பாடுகளுள் ஒன்று. இவ் உயிரிரக்கமே பின்னர், ஜீவகாருண்யம் எனப் பேசப்பெற்றது. இத்தோடு, சமய வாழ்வு முடிந்துவிடவில்லை. மேலும் திருமூலர் தொடர்கிறார்.

''யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி''

---

**மக்கள் நலிவுற்றகாலை, அவர் துயர்துடைக்க வாராத எந்தச் சமயமும், வாழ்வு பெற்றதாக வரலாறே இல்லை.**

---

தன்னொத்த மனிதன் பசித்துக்கிடக்கையில், அவன் காண உண்பான், சைவனாதல் ஒருகாலும் இல்லை. உனக்கு உணவு கிடைத்து உண்ணும் போது, பசித்திருப்பான் ஒருவனுக்கு ''ஒரு பிடி அன்னம் இட்டு உண்'' என்று, மனித நேயத்தை மகத்தான கொள்கையாக வற்புறுத்துகிறது. யாருக்கு இடுவது? திருநீறு பூசிய சைவனுக்கு மட்டும்தானா? இல்லை; யாராக இருந்தாலும் பசித்தவனுக்கு ஒரு பிடி அன்னம் இடு என்று மன விரிவோடு சைவம் எல்லையிட்டுக் காட்டுகின்றது.

'' நேரவந்தவர் யாவராயினும்''
என்றும்,
''அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில்''

என்றும் வரும் திருமுறைத் தொடர்கள், சைவம் விரித்த மனித நேயம், இன்னார் இனியார் என்று பாராது அமைந்திருந்த



www.saivamonline.com

பெருமிதத்தைப் பேசிக் காட்டுகின்றன. நிறைவாகத் திருமந்திரம்,

''யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே''

என்று தனி மனிதப் பண்பாட்டை வற்புறுத்துகின்றது.

சைவம், மனிதன் மனிதனிடம் காட்ட வேண்டிய அன்பு கலந்த பண்பாட்டையும் வற்புறுத்துகின்றது. ''இனிய உளவாக இன்னாத கூறும் இயல்புடையார்'' சமயவாதிகள் என உரிமை கொண்டாடுவதைச் சைவம் ஏற்க மறுக்கின்றது. ஒன்று சேர்த்துப் பார்க்கும் போதில் சைவம் சார்ந்த சமய வாழ்வில் சடங்குகளுக்கு உரிய பங்கு நான்கில் ஒன்றாகவே அமைகின்றது.

சிற்றுயிர்கள்பால் காட்டும் உயிரிரக்கம் ஒரு கூறாக, மனித நேயம் ஒரு கூறாக, மனிதப் பண்பாடு ஒரு கூறாகச் சைவம் என்ற உன்னத நெறி உருப்பெற்று உயர்கின்றது.

---

**ஒவ்வொரு மனிதனுக்கும் சில கடமைகள் உண்டு. அவற்றை அவன் இயற்ற வேண்டுவது, சமூக ஒழுங்கிற்கு இன்றியமையாத ஒன்று. அதனைத் திறமறிந்து இயற்றுவான் ஒருவன், ''நான் இயற்றினேன்'', என்னால்தான் நடந்தது, ''நான் இல்லாவிட்டால் சிறிதும் நடந்திராது'' என்ற எண்ணம் சிறிதுமின்றி, மனத்தால் அடங்கியிருக்கும் பண்பாட்டுத் திறத்தையே ''கிடத்தல்'' என்ற சொல்லால் அப்பரடிகள் பதிவு செய்கின்றார்.**

---

திருமூலர் காலம், அப்பரடிகளுக்குப் பிற்பட்டது என்பது அறிஞர் பலர் கண்ட முடிபு. என்றால், சைவம் பற்றிய இவ் உயரிய கோட்பாடு உருப்பெறுவதற்கே அப்பரடிகளின் வாழ்வும் வாக்குமே அடித்தளம் என்பது உறுதியாகின்றது.

நால்வகை நெறிகளுள் ஒன்று சரியை என்பது. திருக்கோயில்களுள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கத்



www.saivamonline.com

திருமேனிகளுக்குச் செய்யப் பெறும் புறப்பூசை முறைகளைச் சரியை என்பர். இந்நெறி நின்றவர் அப்பரடிகள் என்பது ஒரு பொதுவான மதிப்பீடு. திருவாரூர்த் திருத்தாண்டகத்துள்,

''நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா''

என அழைத்து அலகிடல், மெழுக்கிடல், பூமாலை புனைந்தியற்றல், புகழ்ந்துபாடல், தலையால் கும்பிடல், கூத்தாடல் என முதற்படியான சமயச் சடங்குகளை விரித்துரைப்பார் அப்பரடிகள்.

---

**எவ்வுயிர்க்கும் தீங்கு நேராது, அகிம்சை என்ற நெறி நின்று, தன்னைத் தானே வருத்திக்கொள்ளும் ''சத்தியாக்கிரகம்'' என்ற பெருநெறி, அப்பரடிகளால் கி:பி.7 ஆம் நூற்றாண்டில் முதன் முதல் அறிமுகப்படுத்தப்படுகிறது. 20 ஆம் நூற்றாண்டில் காந்தியடிகள் மேற்கொண்ட அகிம்சை நெறியிலான சாத்துவிகப் போராட்டம் என்று வருணிக்கப்பட்ட சத்தியாக்கிரகம், 1300 ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழ் நாட்டில், ஒரு சமயச் சான்றோரால் அறிமுகப்படுத்தப் பட்டவொன்று என்பது நமக்குப் பெருமை தருகின்றது.**

---

இரண்டாவதாகிய உயிரிரக்கம், அப்பரடிகள் சைவத்திற்கு வற்புறுத்தி வழங்கிய அருட்கொடைகளுள் ஒன்று. சங்க இலக்கியங்கள், தமிழர் வழிபாட்டு மரபுகளை ஆங்காங்குச் சுட்டிச்செல்லுகின்றன. வழிபாடுகளில், உயிர்ப்பலி பற்றிய சில குறிப்புக்களை ஆங்காங்கே காண முடிகின்றது.

உயிரிரக்கம் என்ற உன்னதமான கோட்பாட்டைத் தமிழக மக்களுக்கு வற்புறுத்தி வழங்கிய மதங்கள் சமணமும், பௌத்தமும். சிலப்பதிகாரமும், மணிமேகலையும் உயிர்ப்பலிக்கு எதிராக முழக்கங்கள் இடுவதை அவற்றுள் காணலாம்.



www.saivamonline.com

வேள்விகளை உடன்பட்டு, உயிர்ப்பலியை ஏற்ற வேத வழிப்பட்ட, வைதிகச் சமயங்களுள் ஒன்றாகிய சைவம், அப்பரடிகள் காலத்தில் மீண்டும் புத்துயிர்பெற்றது. அக்காலை, உயிர்ப்பலியை முற்றாக வெறுத்த எல்லா உயிர்களிடத்தும் அன்புசெலுத்தும் கருணையே சைவத்தின் மூலமான தருமநெறி என்று அப்பரடிகள் வற்புறுத்தி உரைத்தார். ''தயாமூலதன்மம்'' என்ற அப்பரடிகளின் தொடர் ''கருணையே அடிப்படையான தருமம்'' என்ற பொருளைத்தருவது. சமணத்தை வெறுத்துச் சைவம் புகுந்த அப்பரடிகள், சமணர்களின் உயர்கோட்பாடாகிய உயிரிரக்கத்தைப் போற்றிச் சைவத்திற்குக் கொண்டு வந்தனர் என ஆராய்ச்சியாளர்கள் பலர் சான்றுகள் காட்டி விளக்குகின்றனர். திருமழபாடித் தேவாரத்துள்,

---

**சமயம் என்பது பல்வேறு காரணங்களால் பிரிந்து கிடக்கும் ஒரு சமூக மக்களை, ஒன்று படுத்தும் ஒரு பெரிய சக்தியாகக் கருதத்தக்கது. உறவு, சாதி, இனம், மொழி என்பனவற்றையெல்லாம் விட, மக்களை ஒன்றுபடுத்தும் பெரிய சாதனமாகச் சமயம் விளங்க வல்லது.**

---

''தனந்திருந்தும் அவர் திறத்தை ஒழியப்பாற்றித்
தயாமூல தன்மவழி எனக்குநல்கி''

என்றும், திருநள்ளாற்றுத் தேவாரத்துள், ''சிவபெருமான் தானே கருணை நெறி நின்று ஒழுகுவான்'' என்பாராய்,

''சலங்கெடுத்து தயாமூலதன்மன் என்னும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங் கொடுக்கும் நம்பியை''

என்றும் பதிவு செய்து காட்டுகின்றார்.

உயிர்க்கொலையும், புலைப்பொசிவும் இல்லாத உன்னத நெறியாகச் சைவம் உயர, முதல் முயற்சி மேற்கொண்ட பெருமை, அப்பரடிகளுக்கே சென்று சேர்கின்றது. தமக்குப் பல்வேறு துன்பங்களையும் துயரங்களையும் விளைக்கக் காரணர்களாக



www.saivamonline.com

இருந்த சமணர்களுக்கு, யாதொரு துன்பத்தையும் விளைக்காத பண்பினையும், தம் தேவாரத்துள் அவர்களை இகழ்ந்துரைக்காத ஏற்றத்தையும் நோக்கும்போது, ''தயாமூலதன்மம்'' என்ற கருணைப் பெருநெறியைச் சைவத்திற்கு வற்புறுத்தியதோடமையாது, தாமே அந்நெறி நின்று, வாழ்ந்து காட்டிய அப்பரடிகளின் சான்றாண்மையையும் நம்மால் உணர்ந்து மகிழ முடிகின்றது.

அப்பரடிகள் திருஞானசம்பந்தரோடு இணைந்து தலயாத்திரை மேற்கொள்ளுகின்றார். திருவீழிமிழலையில் இருவரும் தங்கியிருக்கின்றனர். அக்காலை, நாட்டில் கொடிய பஞ்சம் நிலவுகின்றது. மக்கள் பட்டினியால் சாம்புகின்றனர். கோயில், வழிபாடு என்று பயணம் தொடர்ந்து, தம்மை ஏற்கும் செல்வர் இல்லங்களில் உணவு கொண்டு அப்பரடிகள் சென்றிருந்தால், உலகம் அவரைக் குறை கூறப்போவதில்லை. பஞ்சகாலத்தில், வறுமை நீக்கிப் பசித்தோருக்கு உணவிட

---

**பேதங்களை விட்(டு), ஒருமை காண விழைவாரைக் கடவுளராகக் கருதித் தாம் வணங்க இயலும் என்ற உயர்வான நெஞ்சம், அப்பரடிகள் வழங்கும் ஆன்மிகப் பெருநெறியாக விரிகின்றது.**

---

வேண்டிய கடமை அரசுக்கு உரியதே அன்றி ஆன்மிக வாதிகளுக்கு உரியது அன்று என அவர் கூறியிருக்கலாம். ஆனால், பல நூறு பேர்கள் பசித்திருக்கத் தாம் மட்டும் உண்ணும் கீழ்மையை, ஒருகாலும் நினையாத சமயத் தலைவர்கள், இறைவன் திருவருளை வேண்டிப் பணிந்தனர். ''மனமிருந்தால் மார்க்கமுண்டு'' என்பர் முன்னோர். சிவபரம் பொருளே அப்பரடிகளின் உள்ளக் கிடக்கையை அறிந்து,

''கால நிலைமையால் உங்கள் கருத்தில் வாட்டமுறீர் எனினும்
ஏல உம்மை வழிபடுவார்க்கு அளிக்க அளிக்கின்றோம்''

என்று, குற்றமற்ற படிக்காசினை அப்பரடிகளுக்கு அளித்தருள்கின்றார். அதிலும், கைத்தொண்டு புரிந்த



www.saivamonline.com

காரணத்திற்காக வாசி இல்லாக் காசு அவருக்கு வழங்கப் பெற்றதாகச் சேக்கிழார் குறிக்கின்றார். இக்காசுகொண்டு, சோறு நாளும் தொண்டர் மகிழ்ந்துண்ண, அரிய செயலைச் செய்து உயர்கின்றார்.

மக்கள் நலிவுற்றகாலை, அவர் துயர்துடைக்க வாராத எந்தச் சமயமும் வாழ்வு பெற்றதாக வரலாறே இல்லை. சமயவாதியாகிய அப்பரடிகள் ''உண்ணும்போது ஒருகைப்பிடி'' என்ற சமயக் கோட்பாட்டுக்கு உயிர் தந்து, சமூகவாதியாக உயரும் சிறப்பினைத் திருவீழிமழலை நிகழ்ச்சிகள் நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

---

**ஈசனார்க்குப் பூசனை புரிய வேண்டுமா? கற்கோயில் நாடி அலையாதீர்கள். உங்கள் உடம்பையே ஆலயமாக்கிக் கொள்ளுங்கள். வழிபாடு நடத்தும் பக்தன் உங்கள் மனம்தான். நீராட வேண்டுமா? நதிகளை நோக்கி ஓடாதீர்கள்; வாய்மை என்ற நீரிலேயே மூழ்கி எழுங்கள். உங்கள் அக மனத்துள்ளுறையும் ஆன்மாவைச் சிவலிங்கத் திருமேனியாகக் கொள்ளுங்கள். அபிடேக ஆராதனைகளுக்கு வெளியில் வேறு எதனையும் தேடி ஓடாதீர். நேயம் எனப்படும் அன்பினையே நெய்யாகவும், பாலாகவும், தூய நீராகவும் கொண்டு பொருந்த அபிடேகம் செய்யுங்கள். இந்த அகப் பூசனைக்கு ஈடான பூசனை உலகில் வேறு இல்லை என்கிறார் அப்பரடிகள்.**

---

மனிதப் பண்பாடு என்பது சைவத்தின் உயிர்நாடிக் கொள்கைகளில் தலையாய ஒன்று. வாழ்வையே சத்திய சோதனையாக ஆக்கிக் கொண்ட அப்பரடிகள், சமயம் சார்ந்த சமூகப் பண்பாட்டில் மலை விளக்கமாகச் சுடர்விடுகின்றார். நல்லமனம், நற்சொல், இனிய செயல் என்பன பண்பாட்டின் அடித்தளங்கள்.



www.saivamonline.com

அப்பூதி அடிகள் இல்லத்தில், அவரைச் சந்தித்த அப்பரடிகள் ''நீர் வைத்த தண்ணீர்ப் பந்தலில் நும் பெயர் எழுதாது வேறு ஒருவர் பெயர் எழுதியது ஏன்?'' என வினவுகின்றார். வந்திருப்பவர் தம் இதய தெய்வம் நாவரசர்தாம் என்பதை அறியாத அப்பூதியடிகள், அன்பு மிகுதியால் சினந்து ''எங்குறைவீர்? நீர் தாம் யார்?'' என வினாக்களை அடுக்குகின்றார். நாவரசருக்கு அப்பூதி அடிகளின் சினத்திற்குப் பின்புலமான அன்பு தெரிகிறது.

''பிற துறையில் நின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும் உணர்வில்லாத சிறுமையேன் யான்''

---

**நெஞ்சத்தை மெய்மையால் உழவேண்டும். திருவருளை அடைந்தே தீருதல் வேண்டும் என்ற பக்தி வைராக்கியத்தை விதையாகப் பாவ வேண்டும். மெய்மை உழவு செய்யும் போதே வேரற்றுவிடும் பொய்ம்மைகளை முற்றாக நீக்க வேண்டும். எதனையும் தாங்கி நிற்கும் பொறுமை என்னும் நீரை நாள்தோறும் பாய்ச்ச வேண்டும். தகுதிப்பாடு எனப்படும் நல்லொழுக்கங்களால் வேலி அமைத்தல் வேண்டும். அத்தனையும் செய்து செம்மை எனப்படும் உயர் பண்பில் தலை நிற்பாரானால் சிவகதி என்னும் பயிர் தாமே விளையும்.**

---

எனப் பண்பாடு கலந்த மென்மொழிகள் அப்பரடிகள் திருவாயிலிருந்து வெளிப்படுகின்றன.

அப்பரடிகளின் பண்பாடு நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது.

இதேபோல், திருப்பூந்துருத்தியில் வாழ்ந்திருந்த அப்பரடிகளைக் காணவந்த திருஞான சம்பந்தர், ஊர் எல்லையில் ''எங்குற்றார் அப்பர்'' என வினவுகின்றார். தம்மை நாடிவந்த



www.saivamonline.com

ஞானசம்பந்தர் பல்லக்கை, அவர் அறியாமல் தோளிலே தாங்கிவரும் அப்பரடிகள் கீழிருந்து,

"உம் அடியேன் உம் அடிகள் தாங்கிவரும்
பெருவாழ்வு வந்தெய்தப்பெற்று இங்குற்றேன்"

என மென்மொழி புகல்கின்றார். தாழ்வும், பணிவும், இன்சொல்லும் பண்பாட்டுக்கு அழகூட்டும் உயர்பண்புகள் என்பதை இந்நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன.

தம் வாழ்வால், அஞ்சாமை, உயிரிரக்கம், மனித நேயம், பண்பாடு என்ற நால்நெறிகளை வகுத்தளித்த அப்பரடிகள், தம் வாக்கால் வழங்கியருளிய ஆன்மிகச் செல்வங்கள் அடுத்து நம் நெஞ்சில் நிழலாடுகின்றன.

நாவரசர் வருகை, உன்னதமான ஒரு பெருநோக்குடையது என்பதை முதன் முதலில் இனங்கண்டு காட்டியவர் தெய்வச் சேக்கிழார்.

---

**மனிதப் பண்புகள் வளர்ச்சி பெறாதபோது, அறிவையே துணையாகக் கொண்டு தொடங்கப்படும் வாழ்க்கைப் பயணம் இடையில் இற்று அழிந்துவிடும் என எச்சரிக்கின்றார். இறை உணர்வு என்பது ஒரு பற்றுக்கோடு. மனிதப் பண்பின் வளர்ச்சியே வெற்றியை அடைவதற்குரிய வாயில்.**

---

"திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர்"

எனத் திருத்தொண்டின் நெறி வாழவந்தவர் அப்பரடிகள் என்பதனைப் புராணத்தின் முதற் பாடலிலேயே பதிவு செய்து உணர்த்துகின்றார். கற்களையும், புற்களையும் அகற்றும் உழவாரம் என்ற உன்னதக் கருவியினைக் கையிலேந்தி, உயர் தொண்டு புரிந்தவர் அப்பரடிகள். திருவையாற்றுத் தேவாரப்பனுவல்



www.saivamonline.com

ஒன்றுள், ''தொண்டலால் துணையுமில்லை'' என்று தொண்டே தம் வாழ்க்கைத்துணை என இனம் காட்டுகின்றார்.

தொண்டு என்பது, இங்கே இறைவனுக்குச் செய்யும் தொண்டைத்தான் குறிக்கின்றது. ஆனால், இறைவன் பெயரால் செய்யப்படும் தொண்டின் பயன் மக்களையே சென்று அடைகின்றது. யார்ஒருவர், எந்த ஒரு தொண்டை, எதன் பொருட்டுச் செய்தாலும் அதன் பயன் கடைசியாகச் சமுதாயத்தையே சென்றடையும் என்ற நியதி அறிந்த அப்பரடிகள், மக்கள் தொண்டாக இயற்றி மகிழ்ந்தார். கோயிலில் தொடங்கிய தொண்டு, விரிவடைந்து சமூகத்தில் நிறைந்த திறத்தைச் சேக்கிழார் பல இடங்களில் பதிவு செய்து காட்டுகின்றார்.

தொண்டு செய்தலையே வாழ்வாகக்கொண்ட அப்பரடிகள், தொண்டராகிய தமக்கும், தலைவனாகிய இறைவனுக்கும் இடையே நிலவவேண்டிய உறவை, வெளிப்படுத்துமிடம் உன்னதமானது. கடம்பூர்த் தேவாரப்பதிகத்தில் ''நங்கடம்பனை'' எனத் தொடங்கும் பாடல் ஒன்றில்,

---

**சைவம் என்பது வெறும் சடங்குச் சமயம் அன்று; அது உன்னதமான உயர்கோட்பாடுகளைக் கொண்டது என்பதை, முதன் முதலாக எடுத்துக் காட்டிய பெருமை அப்பரடிகளுக்கே உண்டு.**

---

''தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே''

என்று உரிமை முழக்கமிடுகின்றார். கடமை செய்தார், உரிமை பெறுவதற்கு உரியார் என்ற உயர்ந்த தத்துவத்தினை அப்பரடிகள் அழகுறப் பதிவு செய்கின்றார். ''என் கடன் பணிசெய்தல்'' என்னாது ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்று முடித்த நயம் எண்ணத்தக்கது. கிடத்தல் என்றசொல், ''செயலற்றிருத்தல்'' என்ற பொருளில் வருவது. ஒவ்வொரு மனிதனுக்கும் சிலகடமைகள் உண்டு. அவற்றை, அவன் இயற்ற வேண்டுவது சமூக ஒழுங்கிற்கு இன்றி"யமையாத ஒன்று. அதனைத் திறமறிந்து இயற்றுவான் ஒருவன், ''நான் இயற்றினேன்'', ''என்னால்தான்



www.saivamonline.com

நடந்தது'', ''நான் இல்லாவிட்டால் சிறிதும் நடந்திராது'' என்ற எண்ணம் சிறிதுமின்றி, மனத்தால் அடங்கியிருக்கும் பண்பாட்டுத் திறத்தையே ''கிடத்தல்'' என்ற சொல்லால் அப்பரடிகள் பதிவு செய்கின்றார். ''பணிசெய்தோம்'' என்ற இறுமாப்புச் சிறிதும் இலராய்ப் பணி செய்தாரைக் காக்க வேண்டிய கடமை, இறைவனுக்கு உரியது என்பதையும், அவன் காவல், முன்னதாக உறுதி செய்யப்பட்டாலல்லாது, கடமை சிறவாது என்பதையும் ''தன்கடன் அடியேனையும் தாங்குதல்'' என்ற தொடரால் சுட்டும் திறம் எண்ணி மகிழத்தக்கது.

சமூக வாழ்விற்கும் இவ் அரியதொடர் பொருந்தி வருவது அப்பரடிகளின் உலகியல் அனுபவத்தைப் பறை சாற்றுகின்றது.

''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற உணர்வோடு பணிதொடங்கி நடத்தும் போது இடையூறு நேரிட்டால் என்ன செய்வது? என்ற வினாப் பிறக்கிறது. இடையூற்றிற்குத்

---

**இந்தியத் தத்துவச் சிந்தனைகளுள் காலத்தால் மூத்த சிந்தனை அப்பரடிகள் வழங்கிப்போந்தது. இறைவன் பெயரால் உலகத்தவர்களையெல்லாம் ஒன்றுபடுத்தும் பேதமற்ற பெருநெறி அப்பரடிகளின் தனிநெறி. அங்கே சாதி குலம் இல்லை; ஏற்றத்தாழ்வுகள் இல்லை; அன்பும் மனித நேயமுமே கடவுள். மனித மனவளர்ச்சியும், பண்பாட்டின் முதிர்ச்சியுமே உன்னதமான சமயத்தின் பெருநெறிகள்.**

---

தலைசாய்த்து ஒடுங்கி விடுவதா? இடையூற்றினை எதிர்த்துப் போரிடுவதா? இடையூற்றினை எதிர்த்துப் போரிடுவதானால் சமயம் சார்ந்ததொண்டர் ஒருவர் எவ்வாறு போரிடுவது? வன்முறைப் போராட்டமா? இல்லை வேறு சாத்துவிக நெறிப் போராட்டமுண்டா? என்ற வினாக்கள் அடுக்கு அடுக்காக நம்முன் எழுகின்றன. அப்பரடிகள் அதற்கும்விடை தருகின்றார். எவ்வுயிர்க்கும் தீங்குநேராது, அகிம்சை என்ற நெறி நின்று,



www.saivamonline.com

தன்னைத் தானே வருத்திக்கொள்ளும் ''சத்தியாக்கிரகம்'' என்ற பெருநெறி அப்பரடிகளால் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் முதன் முதல் அறிமுகப்படுத்தப்படுகிறது. 20 ஆம் நூற்றாண்டில் காந்தியடிகள் மேற்கொண்ட, அகிம்சைநெறியிலான, சாத்துவிகப் போராட்டம் என்று வருணிக்கப்பட்ட சத்தியாக்கிரகம், 1300 ஆண்டுகளுக்கு முன்னதாகவே, தமிழ் நாட்டில் ஒரு சமயச் சான்றோரால் அறிமுகப்படுத்தப் பட்டவொன்று என்பது நமக்குப் பெருமை தருகின்றது.

அப்பரடிகள் குடந்தையை அடுத்த பழையாறை சென்று வழிபாடு நிகழ்த்த எண்ணுகின்றார். அங்கே சென்றபோது வடதளி என்ற பெயர் கொண்ட சிவாலயம் மறைக்கப் பெற்று, அமணர்களின் விமானமாகக் காட்சிதரக் காணுகின்றார். உறுதி மிக்க அப்பரடிகள், அடியார்கள் புடைசூழ வடதளி வாயிலில் ''வண்ணம் கண்டு நானும்மை வணங்கியன்றிப் போகேன்'' என்று உறுதியோடு உண்ணாவிரதம் மேற்கொண்டு அமருகின்றார். இறைவன் அருள், அசரீரி வாயிலாக மன்னனிடம் வெளிப்படுகிறது. மன்னன் விரைந்து போந்து சமண்பள்ளியை அகற்றி, உள்ளே மறைந்து கிடந்த வடதளிச் சிவாலயத்தை வழிபாட்டுக்கு உரியதாக்குகின்றான். மகிழ்ந்த அப்பரடிகள், மன்னனைப் போற்றி, வடதளிப் பெருமானை,

''தலையெலாம் பறிக்குஞ் சமண்கையருள்
நிலையினான் மறைத்தான் மறைக்கொண்ணுமோ
அலையினார் பொழில் ஆறை வடதளி
நிலையினானடியே நினைந்துய்ம்மினே''

என்று தொடங்கும் பதிகம் பாடி வணங்கிச் செல்கின்றார். நியாயம் கிடைக்கத் தன்னைத் தானே வருத்திக் கொண்டு போராடும், சத்தியாக்கிரகப் பெருநெறி, அளவற்ற மனத்திண்மை உடையரால் மட்டுமே மேற்கொள்ளவல்லது. உரிமைகளைப் பெற இரத்தம் சிந்தும் போராட்டங்களை நிகழ்த்துவதைவிட, மக்களை உரிய பிரச்சனைகளில் ஈர்க்கவும், ஒருமுகப்படுத்தவும், சத்தியாக்கிரகமே சரியான வழி என்று கண்டு காட்டிய அப்பரடிகளின் மன உறுதி நம்மை இறும்பூது எய்திட வைக்கின்றது.



www.saivamonline.com

சங்க இலக்கியங்கள், தொழில் வழிப்பட்ட சமூகப் பிரிவுகளையே சித்திரிக்கின்றன. பிற்காலத்தே தொழில் வழி உருவான சாதிய நெறிகளையும், அவற்றிடையே உருவான ஏற்றத் தாழ்வுகளையும், அங்கே காண இயலவில்லை. வருணம், குலம், கோத்திரம், சாதி பற்றிய சாத்திரக் கூறுகள் எல்லாம் வளர்ந்து தலைவிரித்தாடிய காலம் கி.பி. 7 ஆம் நூற்றாண்டு என்பதை அப்பரடிகளின் பனுவல்கள் நமக்குத் தெள்ளத் தெளிய எடுத்துரைக்கின்றன.

சமயம் என்பது, பல்வேறு காரணங்களால் பிரிந்து கிடக்கும் ஒரு சமூக மக்களை, ஒன்றுபடுத்தும் ஒரு பெரிய சக்தியாகக் கருதத்தக்கது. உறவு, சாதி, இனம், மொழி என்பனவற்றையெல்லாம் விட, மக்களை ஒன்றுபடுத்தும் பெரிய சாதனமாகச் சமயம் விளங்க வல்லது.

சிவனடியார் என்றபெரு நிலையில், பிறவகைப் பேதங்களை மறந்து, ஒன்றுபட வேண்டிய மக்கள், சமயவாழ்வை ஏற்றுக் கொண்ட பிறகும், தம்முள் சாதி, குலம், எனப்பேதப்பட்டு நிற்றலைக் கண்டு, அப்பரடிகளின் திருவுள்ளம் விம்முகின்றது. கடும் சொற்களைக் கையாளாத அப்பரடிகள், சாதி பேதங்களைச் சாடும் போது சற்றே கடுமையான சொற்களைக் கையாளுகின்றார். அவரது உள்ளத்திலிருந்த சினம், சொற்கள் வாயிலாக வெளிப்படுகின்றது.

''சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்''

என்ற வெளிப்பாட்டில், ''கோத்திரமும் குலமும் கொண்டு'' என்று சாத்திரத்தைச் சான்று காட்டுவாரை எள்ளிநகையாடுகின்றார். அன்னோரைச் ''சழக்கர்கள்'' என்ற கடுஞ்சொல்லாற் குறிக்கின்றார்.

சிவன் இறைவன்; அவன் அருள்பெரிது; அவனை வணங்கினால் ஒரு நொடியில் எல்லாம் கைகூடும் என்று அவன் சந்நிதியில் ஒன்றுபடும் குணமிலராய், சாதி பேதங்களால், சமூகத்தைப்பேதப்படுத்திப் பிரிக்க நினைப்பாரைச் சாடும் அப்பரடிகள், சமய வழியில் சமூக ஒருமைப்பாட்டுக்கு வித்திடும் திறம் புலனாகின்றது. சாதி குலங்களால் வேறுபட்டு



www.saivamonline.com

இருப்பாராயினும், நோயால் நொந்து கிடப்பாராயினும், அவர்களையெல்லாம் ஒன்றாகக் கருதி ஈடேற்ற, சமயம் என்ற பெருநெறி ஒன்றைத் தவிர, வேறு மார்க்கம் இல்லை என்று தெளிந்த அப்பரடிகள், மேலும் ஒருபடி கடந்து,

''அங்கமெலாம் குறைந்து அழுகுதொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்ப ராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே''

என்று அருளிச் செய்கின்றார்.

மனித குலம் பேதங்களை விடுத்து ஏதேனும் ஒரு பொது அடிப்படையில் ஒன்றுபடுமானால், சமூகவளர்ச்சி என்பது எவ்வளவு உன்னதமாக அமையும் என்று எண்ணும் அப்பரடிகளின் உயர் நெஞ்சம் இங்கே புலப்பட்டுத் தோன்றுகின்றது. பேதங்களை விட்டு, ஒருமை காண விழைவாரைக் கடவுளராகக் கருதித் தாம் வணங்க இயலும் என்ற உயர்வான நெஞ்சம் அப்பரடிகள் வழங்கும் ஆன்மிகப் பெருநெறியாக விரிகின்றது. எல்லாப் பொருள்களிலும், எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான் என்ற உணர்விலராய்ச் சடங்குகளையே சமயம் என்று கருதிக் கங்கையிலும் காவிரியிலும் மூழ்கிக்கிடப்பாரை,

''கங்கையாடில்என், காவிரி ஆடில்என்
கொங்குதண் குமரித்துறை ஆடில்என்
ஒங்கு மாகடல் ஓதநீராடிலென்
எங்கு மீசன் எனாதவர்க்கில்லையே''

என எள்ளி நகையாடுகின்றார்.

புற அழுக்குகளை நீக்க நதிகளை நாடிச் செல்லும் மக்கள், சாதிபேதங்களிலும் ஏற்றத் தாழ்வுகளிலும் அழுந்திக் கிடக்கும் மன அழுக்குகளை நீக்கிக் கொள்ள முயலாது, அவமே காலங் கழிப்பதைக் கண்டு சகிக்காத அப்பரடிகளின் நெஞ்சம் நன்கு புலனாகின்றது.

சமயத்துறையில், இறைவன் திருவருளைப் பெறுவதற்குரிய வாயில் எது என்ற வினாவிற்கு, அப்பரடிகள் தரும் விளக்கம்



www.saivamonline.com

நம்மைச் சிந்திக்க வைக்கின்றது. சிவலிங்க வழிபாட்டை எப்படி எங்கே எவ்வாறு நிகழ்த்துவது என்பதற்கு, அப்பரடிகள், சிவாலயத்தையும், சிவலிங்கத்தையும், அபிடேக ஆராதனைகளையும் வற்புறுத்துகின்றார். ஆனால், நாம் நினைப்பது போலல்லாமல், வேறு வகையாக அவர் விளக்கம் அமைகின்றது. ஈசனார்க்குப் பூசனை புரிய வேண்டுமா? கற்கோயில் நாடி அலையாதீர்கள், உங்கள் உடம்பையே ஆலயமாக்கிக் கொள்ளுங்கள். வழிபாடு நடத்தும் பக்தன், உங்கள் மனம்தான். நீராட வேண்டுமா? நதிகளை நோக்கி ஓடாதீர்கள்; வாய்மை என்ற நீரிலே மூழ்கி எழுங்கள். உங்கள் அக மனத்துள்ளுறையும் ஆன்மாவைச் சிவலிங்கத் திருமேனியாகக் கொள்ளுங்கள். அபிடேக ஆராதனைகளுக்கு வெளியில் வேறு எதனையும் தேடி ஓடாதீர். நேயம் எனப்படும் அன்பினையே நெய்யாகவும், பாலாகவும், தூய நீராகவும் கொண்டு, பொருந்த அபிடேகம் செய்யுங்கள். இந்த அகப் பூசனைக்கு ஈடான பூசனை உலகில் வேறு இல்லை என்கிறார் அப்பரடிகள்.

> "காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
> வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
> நேயமே நெய்யும்பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்
> பூசனை ஈசனார்க்குப் போற்றுவிக் காட்டினோமே"

சமயத் துறையில், புறப்பூசைகளெல்லாம் உன்னையே நீ கோயிலாக்கிக் கொள்வதற்கான எண்ணத்தை உருவாக்கவே. மனிதர்கள் நடமாடும் கோயில் நம்பர்கள் ஆதல் வேண்டும். வாய்மையும், அன்பும் வளர்ந்து ஓங்கும் போது, இறைவன் உன் உள்ளத்திலிருந்தே வெளிப்படுவான் என்பன சமயத்துறையில் அப்பரடிகள் காட்டும் புரட்சிகரமான வழி முறைகளாக அமைகின்றன. மனிதனின் உயர்குண வளர்ச்சியே உன்னதமான சமயம் என்ற மதிப்பீடு ஆன்மிகத் துறையில் ஒரு புதிய தடமாக அமைகிறது.

வழிபாடு நிறைவுற்றாயிற்று. சிவகதி என்ற பெரும்பேறு எப்போது வாய்க்கும் என்று வினவுவார்க்கு, அப்பரடிகள் விடை சொல்கின்றார். ஓர் உயரிய விளைவைப் பெற, ஓர் உழவன் மேற்கொள்ள வேண்டிய உன்னதமான முயற்சிக்



www.saivamonline.com

கூறுகளையெல்லாம், உருவகமாக்கிச் சமயத்துறையில் ஒரு புதிய தடம் காட்டுகின்றார்.

உழுதல், விதைத்தல், களைநீக்குதல், நீர்ப்பாய்ச்சுதல், வேலியமைத்தல் என்பன முறையாக அமைந்தால் விளைவு நிச்சயமாகும். இங்கே சிவனருள் என்ற விளைவைப் பெற எவ்வெவ்வாறு முயல வேண்டும் என்கிறது ஓர் அழகிய தேவாரத் திருப்பாட்டு.

''மெய்ம்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையைவாங்கிப் பொறையெனும்நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டுதகவெனும் வேலிஇட்டுச்
செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையுமன்றே''

நெஞ்சத்தை மெய்ம்மையால் உழவேண்டும். திருவருளை அடைந்தே தீருதல் வேண்டும் என்ற பக்தி வைராக்கியத்தை விதையாகப் பாவவேண்டும். மெய்ம்மை உழவு செய்யும் போதே வேரற்றுவிடும் பொய்ம்மைக்களை களைமுற்றாக நீக்க வேண்டும். எதனையும் தாங்கி நிற்கும் பொறுமை என்னும் நீரை நாள்தோறும் பாய்ச்சவேண்டும். தகுதிப்பாடு எனப்படும் நல்லொழுக்கங்களால் வேலி அமைத்தல் வேண்டும். அத்தனையும் செய்து செம்மை எனப்படும் உயர் பண்பில் தலை நிற்பாரானால் சிவகதி என்னும் பயிர் தாமே விளையும்.

மனித மனவளர்ச்சியிலும், மனிதப் பண்புகளின் வளர்ச்சியிலும் அப்பரடிகளுக்குத்தான் எவ்வளவு பெரிய நாட்டம்!

செய்வன செய்து, தவிர்வன தவிர்த்து வாழும் நெறியான வாழ்வை இம்மையில் மேற்கொள்ளுதலே போதுமானது. இறையருள் என்பது எங்கிருந்தோ வருவது அன்று. அது உன்னுள் தோன்றி உருப்பெற்று மலர்வது என்ற அப்பரடிகளின் கூற்று சமயத்துறையில் முற்றும் புதிய சிந்தனையாக அமைகின்றது.

அப்பரடிகள் காட்டிய மனித மன வளர்ச்சி நெறியை விட்டு அறிவே துணையாக ஆண்டவனை அடைந்துவிட முயல்வார்க்கு, அது இயலாது என்று அவர் எச்சரிக்கையும் செய்கிறார். சிலர், மனமே துணையாக அறிவினைப்பெரிதென்றெண்ணி வாழ்க்கைப்



www.saivamonline.com

பயணத்தைத்தொடங்கியும் விடுகின்றனர். கடும் சினம் நிறைந்த பாரம் ஏற்றிய படகு, ஐம்புல ஆசை என்ற பாறை மேல் மோதும்போது எல்லாமே இல்லாது போய் விடுகின்றது. எவ்வளவு அழகான உருவகம்.

''மனம் எனும்தோணிபற்றி மதியெனும் கோலை ஊன்றிப்
சினம் எனும் சரக்கைஏற்றிச் செறிகடலோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போதறிய வொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடையகோவே''

மனிதப்பண்புகள் வளர்ச்சி பெறாதபோது, அறிவையே துணையாகக் கொண்டு தொடங்கப்படும் வாழ்க்கைப் பயணம், இடையில் இற்று அழிந்துவிடும் என எச்சரிக்கின்றார். இறை உணர்வு என்பது ஒரு பற்றுக்கோடு. மனிதப் பண்பின் வளர்ச்சியே வெற்றியை அடைவதற்குரிய வாயில். அறிவே எல்லாவற்றையும் சாதிக்கப் போதுமானது என்பார்க்கு ஓர் எச்சரிக்கையாக அமைகிறது இவ் அழகிய திருப்பாட்டு.

அப்பரடிகள் வழங்கிய ஆன்மிகச் செல்வம், மக்கள் இனத்தை எல்லாம் ஈடேற்றும் உன்னதமானது. அவர் தம் வாழ்வாலும் வாக்காலும் உணர்த்திய இறைமை சார்ந்த அறநெறிக் கோட்பாடுகளே இங்கு ஆன்மிகச் செல்வம் என ஆராய்ந்து காட்டப்பட்டது.

கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் தமிழகம் தன் பண்டைப் பெருமைகளை எல்லாம் இழந்து நின்ற நேரத்தில், விடிவெள்ளியாக அவதரித்த பேரருளாளர் அப்பரடிகள். மன்னன் தவறிழைத்த காலை, ஒரு தனிமனிதர் அரசுக்கெதிராகப் போர்க்கொடி உயர்த்திய தீரம் சமயம் சார்ந்த ஒரு சமூகப் புரட்சியாகவே கருதப்பட்டது. சைவம் என்பது வெறும் சடங்குச் சமயமன்று; அது உன்னதமான உயர்கோட்பாடுகளைக் கொண்டது என்பதை முதன் முதலாக எடுத்துக்காட்டிய பெருமை அப்பரடிகளுக்கே உண்டு. அப்பரடிகளின் உன்னத வாழ்வில் தொண்டு என்பதே தலையாயது. இறைவன் பெயரால் மக்களினத்திற்குச் செய்யும் உயர் பணிக்கு வித்திட்டவரும் அவரே.



www.saivamonline.com

பகைமேகம் சூழுங்காலை அதனை எதிர்த்துப் போராடுதல் வேண்டும். அப்போராட்டம் இரத்தம் சிந்தாமல் சாத்விகப் போராட்டமாதல் வேண்டும் என்று வற்புறுத்தித் தனிமனித சத்தியாக்கிரகத்தை, உண்ணா நோன்பால் சாதித்துக் காட்டிய முதல் வரும் அவரே. சாதிகுலம் எனச் சாத்திரம் பேசி, மக்களை வேறுபடுத்த முனைந்தாரைச் சாடி, ஓர் இறைவன் பெயரால் மக்களினம் ஒன்றுபடல் வேண்டுமென முதல் முழக்கமிட்ட பெருமையும் அப்பரடிகளுக்கே உரியது.

இறைவனை நாடிக் கோயிலுக்குப் போவதை விடுத்து, உன்னையே ஒரு நடமாடும் கோயிலாக்கிக் கொள் என்று வற்புறுத்தியவரும் அவரே, சிவகதியாகிய விளைவைப்பெற மெய்ம்மை உழவு முதலானவற்றை மேற்கொள்ள வேண்டுமெனத் தனிமனித உள்ள வளர்ச்சியை, உருவகத்தால் சுட்டிக் காட்டிய சிறப்பும் அப்பரடிகளுக்கே உரியது.

இந்தியத் தத்துவச் சிந்தனைகளுள் காலத்தால் மூத்த சிந்தனை அப்பரடிகள் வழங்கிப்போந்தது. இறைவன் பெயரால் உலகத்தவர்களையெல்லாம் ஒன்றுபடுத்தும் பேதமற்ற பெருநெறி அப்பரடிகளின் தனிநெறி. அங்கே சாதி குலம் இல்லை. ஏற்றத்தாழ்வுகளில்லை. அன்பும், மனிதநேயமுமே கடவுள். மனித மனவளர்ச்சியும், பண்பாட்டின் முதிர்ச்சியுமே உன்னதமான சமயத்தின் பெருநெறிகள். தான் கண்ட பெருநெறித் தலைவனுக்கு அவர் சிவம் எனப் பெயரிட்டார். வேறுபடப் பிறர் கூறினும் தமக்கு அதுவும் உடன்பாடே என நேசக்கரம் நீட்டினார்.

இந்த உன்னத ஆன்மிகப் பெருநெறியை விலைமதிப்பற்ற செல்வங்களாக நமக்கு வழங்கியவர் அவர். இத்தகு உன்னதச் செல்வத்தைப் போற்றிப் பாதுகாப்பதும், உலகவர்களுக்கெல்லாம் வழங்குவதும் தமிழரின் தலையாய கடமையாகிறது.

www.saivamonline.com